**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8075871

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : திருவாரூர் PS காவல்நிலையம்: ல.ஒ.த.க. பிரிவு Year ஆண்டு: 2022 FIR No. மு.த.அ. எண்: 01/AC/2022. Date நாள்: 04.01.2022

2. (i) Act சட்டம்: The prevention of corruption Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act. 1988 as amended in Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 31.12.2021 at 12.00 PM and
Time Period நேர அளவு : Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 03.01.2022 at 12.15 PM
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம் : 04.01.2022 at 08.30 AM
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்: [illegible] தொடக்க வேளாண்மை கூட்டுறவு மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி. சுமார் 45 கி.மீ கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு. நாகராஜன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : பி. பெரியநாயகம் பிள்ளை
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 87/2022
(d) Nationality : நாட்டினம் : இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் : விவசாயம்
(g) Address : முகவரி : முதலியார் தெரு, கோட்டூர்பட்டி கிராமம், [illegible] வட்டம், திருவாரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. முருகன், செயலாளர், [illegible] தொடக்க வேளாண்மை கூட்டுறவு மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி, [illegible], திருவாரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விவரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ……………………. Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 4.1.22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station [signature] 04.01.22
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்
04.01.2022 at 12.15 hrs

Name: பெயர் P. PALANISAMY
Rank: நிலை INSPECTOR OF POLICE, V & AC, DHARMAPURI

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/AC/2022, u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி .

******

இன்று 04.01.2022 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கோட்டப்பட்டி கிராமம், குடியானவர் தெருவைச் சேர்ந்த, முத்தையா முதலியார் மகன் திரு.நாகராஜன், வயது 87 என்பவர் அலுவலகம் வந்து வாய்மொழியாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

******

நான் தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கோட்டப்பட்டி கிராமம், குடியானவர் தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 10– ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு வயதாகிவிட்டதால் தெளிவாக எழுத முடியாது. எனக்கு சொந்தமான விவசாய நிலம் அரூர் வட்டம், கோட்டப்பட்டி கிராமத்தில் உள்ளது. தற்போது அதில் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு 3 மகன்கள், 2 மகள்கள் உள்ளனர். அனைவருக்கும் திருமணமாகிவிட்டது. தருமபுரி மாவட்டம், கே.கே.140 அரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி நிறுவனத்தில் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு உறுப்பினராக சேர்ந்து தற்போது வரை அதில் உறுப்பினராக உள்ளேன். என்னுடைய உறுப்பினர் எண்.3831A ஆகும். கடந்த 1967 ல் கிணறு வெட்டுவதற்கு மேற்படி வங்கியில் அடமானக் கடனாக ரூ.9,000/– ம் பெற்று, அதற்கு அடமானமாக கோட்டப்பட்டி வருவாய் கிராம சர்வே எண்.91/1 ன் கீழ் அடங்கிய என்னுடைய நிலத்தை காட்டி அரூர் சார்பதிவாளர் அலுவலத்தில் ஆவண எண்.2891/1967, நாள் 19.12.1967 ஆக அடமான பத்திரம் மேற்படி வங்கியின் பெயரில் பதிவு செய்து கொடுத்தேன். பின்னர் டிராக்டர் வாங்குவதற்கு 1986 ல் ரூ.29,200/– ஐ அடமானக் கடனாக பெற்று, அதற்கான அடமானமாக கோட்டப்பட்டி வருவாய் கிராம சர்வே எண்.91/1 ன் கீழ் அடங்கிய என்னுடைய நிலத்தை காட்டி அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2090/1986, நாள் 31.12.1986 ஆக அடமான பத்திரம் மேற்படி வங்கியின் பெயரில் பதிவு செய்து கொடுத்தேன். மேற்படி இரண்டு கடன்களையும் நான் முறையாக திருப்பி செலுத்திவிட்டேன். எனவே மேற்படி அடமானப் பத்திரங்களை ரத்து செய்து அந்த சொத்துக்களின் பெயரில் உள்ள வில்லங்கத்தை அகற்றி, அந்த சொத்தினை என்னுடைய பெயருக்கு மாற்ற வேண்டி, அரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு

மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் செயலாளர் திரு.முருகன் அவர்களை கடந்த 2021 நவம்பர் மாதம் ஒரு நாள் மேற்படி வங்கியில் சென்று சந்தித்தேன். அங்கிருந்த செயலாளர் திரு.முருகன் அவர்கள் அடமான கடன் பத்திரங்களை ரத்து செய்ய வேண்டுமானால் கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்று தெரிவித்து அடமான கடன்பத்திர செல்லு ரசீது வழங்க வேண்டும் என்றும், அந்த ரசீது வங்கியின் செயலாளரான அவர்தான் கையொப்பமிட்டு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார். எனவே நான் அவரிடம் மேற்படி இரண்டு கடன்கள் தொடர்பாக அடமான கடன் பத்திர செல்லு ரசீது கொடுக்குமாறு கேட்டேன். அதனை தயார் செய்து தருவதாக செயலாளர் திரு.முருகன் கூறினார். பின்னர் 15.11.2021 ம் தேதி அரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கிக்கு சென்று செயலாளர் திரு.முருகன் அவர்களை சந்தித்து அடமான கடன் பத்திர செல்லு ரசீதை கேட்டேன். அதற்கு திரு.முருகன் அவர்கள் கட்டணமாக இரண்டு கடன்களுக்கும் தலா ரூ.2500/– வீதம் ரூ.5000/– ம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார். நானும், அது அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டிய கட்டணமாக இருக்ககூடும் என்று நினைத்துக் கொண்டு ரூ.5,000/– ஐ செயலாளர் திரு.முருகனிடம் கொடுத்து இரண்டு கடன்களுக்கான அடமான கடன் பத்திர செல்லு ரசீதுகளை வாங்கி கொண்டு வந்துவிட்டேன். அதன்பின்பு கோட்டப்பட்டி வருவாய் கிராம சர்வே எண்.91/1 ன் கீழ் அடங்கும் எனக்கு சொந்தமான விவசாய நிலத்தில் சுமார் 2 ஏக்கரை எனது மூத்த மகள் திருமதி.ராஜேஸ்வரியின் மகளான திருமதி.கவிதா என்பவருக்கு தான செட்டில்மெண்ட் செய்து தருவதற்காக அரூர் சார்பதிவாளர் அலுவலகம் சென்று அங்கிருந்த ஆவண எழுத்தர் மூலமாக ஆன்லைனில் வில்லங்க சான்று எடுத்து பார்த்தபோது அரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியில் என் பெயரில் கடனாக டிராக்டர் வாங்குவதற்கு ரூ.63,000/– ம் கடன் 1982 ல் பெறப்பட்டு, அதற்கான அடமான பத்திரம் அரூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1506/1982 ஆக பதிவு செய்யப்பட்டு, வில்லங்கம் உள்ளது என்று தெரிவித்தார். நான் அந்த கடனை 1987 ல் செலுத்தி விட்டேன் என்று தெரிவித்ததால் மேற்படி அடமான கடன் பத்திரத்தை ரத்து செய்வதற்காக கடன் பத்திர செல்லு ரசீது வாங்குவதற்கு மறுபடியும் அரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் செயலாளர் திரு.முருகன் அவர்களை கடந்த 31.12.2021 ம் தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு மேற்படி வங்கிக்கு

சென்று சந்தித்து கேட்டேன். அங்கிருந்த செயலாளர் திரு.முருகன் அடமான கடன் பத்திர செல்லு ரசீது தயார் செய்து கையொப்பமிட ரூ.3500/– கொடுங்கள் என்று கேட்டார். நான் ஏதற்கு என்று கேட்டதற்கு, அதற்கு செயலாளர் முருகன் அவர்கள் ஏற்கனவே வாங்கிய இரண்ட கடன்களுக்கு ரூ.5000/– ம் கொடுத்து தானே வாங்கி சென்றீர்கள், இதற்கும் தந்தால்தான் செய்ய முடியும் என்று சொன்னார். என்னிடம் பணம் இல்லை என்று தெரிவித்தேன். அதற்கு பணத்தை தயார் செய்துவிட்டு, வரும் திங்கள்கிழமை வங்கியில் வந்து தன்னை சந்திக்குமாறு முருகன் அவர்கள் கூறினார். பின்னர் 03.01.2022 ம் தேதி சுமார் 12.15 மணிக்கு அரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கிக்கு சென்று செயலாளர் திரு.முருகன் அவர்களை சந்தித்து கடனை திருப்பி செலுத்தியதற்கான ரசீதை கேட்டேன். அதற்கு செயலாளர் திரு.முருகன் அவர்கள் ஏற்கனவே கூறியபடி ரூ.3500/– லஞ்சமாக அவருக்கு கொடுத்தால்தான் அடமான கடன் பத்திர செல்லு ரசீதை தயார் செய்து தருவேன் என்று முடிவாக சொல்லிவிட்டார். மேலும் இந்த கடன் டிராக்டர் லோன் தொடர்பானது என்பதால் கூடுதலாக பணம் கொண்டுவருமாறு கூறினார். பணத்தை தயார் செய்துக் கொண்டு எப்ப வேண்டுமானாலும், வங்கியில் வந்து தன்னை சந்தித்து அடமான கடன் பத்திர செல்லு ரசீதை பெற்று செல்லலாம் என்று கூறினார். அரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி செயலாளர் திரு.முருகன் அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.3500/– கொடுத்து என்னுடைய வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. அவர் கேட்ட பணம் ரூ.3500/– ஐ இன்று தான் ரெடி செய்ய முடிந்தது. அவரை இன்று சந்திக்க உள்ளேன். எனவே என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட அரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி செயலாளர் திரு.முருகன் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். படித்து பார்த்தேன். நான் சொன்னபடி சரியாக உள்ளது. ஒப்பம் M.நாகராஜன், 4.1.22. Sir, The oral statement of the informant was recorded by me in the office computer on 04.01.2022 between 08.30 hrs and 09.30 hrs and read it over to him which is admitted to be correct. Further, a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally, was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his statement is genuine. Therefore, a

case in Dharmapuri V&AC, Cr.No. 01/AC/2022, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 (Central Act 16 of 2018) was registered today 04.01.2022 at 10.35 hrs against the accused. The original FIR and the statement of the informant is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

04.01.22

**(P.PALANISAMY)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.